Primrose Schools

ICSE Curriculum
(A Unit of Primrose Educational Trust, Chennai)
An ISO 9001:2015 Certified Institution

State Purpose of Worksheet – மாதிரி வினாத்தாள் [2019 – 2020]

[KG Class work/Home Assignment/Alternate Class work/ Revision Test/Internal Assessment/Formative Assessment/ Summative Assessment/Preboard]

Name:	**Std: IV**	**Subject: தமிழ்-L2**
Date:	**Term: I**	**Topic: NA**
Maximum Marks: 40	**Time Duration:1 3/4hr**	**Type of Assessment (if internal assessment):NA**

I. பொருளுணர்ந்து விடை தருக.

உப்பு, புளி, மிளகாய் மூன்றும் எப்போதும் ஒன்றாகவே இருக்கும். ஒருநாள், "குழம்பிற்கு யார் முக்கியம்? நீயா! நானா!" என்று சண்டை போட்டன. மூன்று பேரும் தனிதனியாகச் சென்று குழம்பில் சேரலாம் என்று முடிவு செய்தன. முதல் நாள், உப்பு மட்டும் குழம்பில் சேர்ந்து கொண்டது. "ஆ! ஒரே உப்பு! வாயில் வைக்க முடியவில்லை!" என்று எல்லோரும் கத்தினார்கள்.

மறுநாள் புளி, "என் திறமையை பற்றி இன்று நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லியது. கொதிக்கும் குழம்பில் போய் பாய்ந்தது. சாப்பிட்டவர்கள் அனைவரும் "சீ!" என்று கத்தியபடி குழம்பைக் கொட்டி விட்டார்கள்.

மூன்றாம் நாள் மிளகாய், "நான் யார் என்று உங்களுக்கு காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டு குழம்புச்சட்டிக்குள் குதித்தது. நெடுநேரம் நீச்சல் அடித்தது. சாப்பிட்டவர்கள் கண்களில் வெள்ளம். அன்றும் குழம்பு வீணாகியது. மூன்று தோழர்களும் தவறை உணர்ந்தன. இனி பிரிய மாட்டோம் என முடிவு எடுத்தன.

கேள்விகள்:

1. எவை மூன்றும் எப்போதும் ஒன்றாகவே இருக்கும்? **[1]**

2. முதல் நாள் குழம்பில் சேர்ந்தது யார்? **[1]**

3. மிளகாயின் சுவை என்ன? **[1]**

4. ஏன் மூன்றும் பிரிய மாட்டோம் என முடிவு எடுத்தன? **[2]**

II. சொற்றொடரில் அடிகோடிட்டுள்ள வார்த்தைக்கு எதிர்ச்சொல் எழுதுக. **[5]**

1. ஆமை <u>மெதுவாக</u> நகரும்.

முயல் _______________ ஓடும்.

2. எப்பொழுதும் <u>உண்மை</u> பேச வேண்டும்.

_________________ பேசக் கூடாது.

3.சூரியன் <u>பகலில்</u> வரும்.

சந்திரன் ___________________ வரும்.

4.பேருந்தில் <u>பின்புறமாக</u> ஏறி _____________________ இறங்க வேண்டும்.

5.புலிக்கு நான்கு கால்கள் உண்டு ; நான்கு தலை _______________

III. சரி , தவறு என்பதை எடுத்து எழுதுக. **[5×½=2½]**

1. மேகம் நீல நிறம். ________

2.குரைக்கின்ற நாய் கடிக்காது. ___________

3. விஜய நாட்டிற்க்கு வருகை தந்த மன்னனின் பெயர் விஜயசுந்தரர் ______

4.தெனாலிராமன் ஏழு இறக்கைக்கொண்ட பறவையை கண்டுப் பிடித்தார் __________

5.முயல் வாழ்ந்த காட்டை பல்லாண்டு காலமாக ஆட்சி செய்தது ஒரு சிங்கம் __________

IV. அடிகோடிட்டுள்ள சொற்களுக்கு ஏற்ற பொருளினைத் தேர்வு செய்க. **[3×½=1 ½]**

1. சில வார்த்தைகளுக்கு இன்றும் அதிக <u>**வல்லமை**</u> இருக்கிறது.

அ.வலிமை ஆ.எளிமை இ.இனிமை ஈ.புதுமை

2. என் தாத்தா பாட்டி எனக்கு <u>**ஆசி**</u> வழங்கினார்கள்.

அ.புகழ்ந்து ஆ.மகிழ்ந்து இ.இகழ்ந்து ஈ.வாழ்த்து

<u>3. **ஆலும்**</u>, வேலும் பல்லுக்குறுதி.

அ.வேலமரம் ஆ.ஆலமரம் இ.அரசமரம் ஈ.வேப்பமரம்

ஏ. கொடுக்கப்பட்டுள்ள சொற்களை பிரித்து எழுதுக. **[3×½=1½]**

1. பிறப்பெடுத்தேன் ____________________
2. மறந்துன்னை ____________________
3. அங்கெல்லாம் ____________________

VI. புதிய சொல் உருவாக்குக. [7×½=3½]

1. படு - ____________________
2. சடை - ____________________
3. புல் - ____________________
4. விதை - ____________________
5. தடை - ____________________
6. மலை - ____________________
7. எது - ____________________

VII. பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றுதல். **[6]**

1. குடிச்சான் ____________________
2. நோம்பு ____________________
3. சுவற்றில் ____________________
4. பதட்டம் ____________________
5. நாட்கள் ____________________
6. கோயில் ____________________

VIII.கேட்கப்பட்டுள்ள காலத்திற்கு ஏற்றவாறு தொடர்களை மாற்றி எழுதுக. [4]

1. நான் வங்கியில் பணம் சேமித்தேன்.

____ (நிகழ் காலம்)

2. சுதா பாடலை கேட்கிறாள்.

____ (இறந்த காலம்)

____________________________ (எதிர் காலம்)

3. நேற்று பாட்டி வந்தாள். (இறந்த காலம்)

________________________ (நிகழ் காலம்)

_________________________ (எதிர் காலம்)

4.நாளை மழை பெய்யும். (எதிர் காலம்)

_________________________ (நிகழ் காலம்)

_________________________ (இறந்த காலம்)

IX. உடல்நிலை சரியில்லாத காரணத்தால் விடுப்புக்கேட்டு உன் வகுப்பாசிரியருக்கு விடுமுறை விண்ணப்பம் வரைக. [5]

X. வினா-விடை

1.புலியை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய நிபந்தனை என்ன? **[2]**

2.'ஆநெய்' 'பூநெய்' ஆகியன எவற்றைக் குறிக்கின்றன? **[2]**

3.விஜயவர்த்தன அரசர் எப்படிப்பட்ட குருவியைக் கொண்டு வரும்படி கேட்டார்? **[2]**